**வரையறுத்த கும்பல்கமுவ மினி கைட்ரோ (தனியார்) கம்பனி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கும்பல்கமுவ மினி கைட்ரோ (தனியார்) கம்பனியின் ‘‘(கம்பனி’’ ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிரத்து கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது 2015 பெப்ரவரி 18 இலிருந்து 20 ஆண்டு காலப் பகுதிகளிற்காக சொந்த கட்டிடம் கட்டும் நோக்கத்திற்காகவும் மினி கைட்றோபவர் பொறி செயற் படுவதற்காகவும் காணியொன்றின் குத்தகைக்கு வனவள பாதுகாப்பு திணைக்களத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், SLFRS – 16 – குத்தகைகள் பிரகாரம், சொத்துக்களின் பயன்பாட்டு உரிமைகள், குத்தகைகள் பொறுப்புகள் மற்றும் அனுமதிப் பத்திரம் மீதான கொடுப்பனவுகள் என்பன கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மினி கைட்றோ மின்வலு அபிவிருத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களின் பிரகாரம் கம்பனியானது வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் காணி குத்தகைக்காக குறித்த நிவாரணத்தை பெறுவதற்கு செயல்பட வேண்டியதுடன் SLFRS – 16 அடிப்படையில் நிதிகள் திருத்தப்பட்டது. கம்பனியானது விதந்துரைக்கப்பட்ட திருத்தங்களை பின்பற்ற வேண்டும். | கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) LKAS 08- கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளில் கணக்கீட்டு கொள்கைகள், மாற்றங்களின் 42(அ) மற்றும் (ஆ) உடன் இணங்கி கம்பனியானது நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யாமல் 2022 ஆம் ஆண்டில் 2019 முதல் 2021 வரையான காலத்திற்காக ரூபா 4.6 மில்லியன் தொகையான இலங்கை முதலீட்டு சபைக்கு (BOI) செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முதலீட்டுச் சபைக்கான வருடாந்த கட்டணம் குறித்த ஆண்டில் செலவினமாக கருதப்பட்டதுடன் இந்த சீராக்கல்கள் 2022 ஒக்தோபர் 05 இல் தகவல் பரிமாற்ற அறிவித்தல் அடிப்படையில் பதியப் பட்டிருந்ததுடன் ஆண்டு வாரி செலவினமாக ஏற்கனவே இனங்காணப்பட்டன. | -மேற்படி- |
| (இ) ரூபா 564,060 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் LKAS 16- ஆதனம், பொறி உபகரணங்களின் 51 ஆம் பிரிவின் பிரகாரம், சொத்தின் மீதியான பெறுமதி மற்றும் பயன்பட்டுக் காலம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படாமல் மீளாய்வாண்டு இறுதிவரையும் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றன. | கம்பனியானது அடுத்த தடவை மீள்மதிப்பீட்டு கொள்கை பின்பற்றப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 இலிருந்து 2022 வரையான காலத்திற்காக வன வள பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலுத்த வருடாந்த கட்டணம் ரூபா 24.38 மில்லியனாக இருந்தது. வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வின் மூலம் செய்யப்பட்ட (VAT உடன்) வருடாந்த கட்டண கணிப்பீட்டின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 25.71 மில்லியனாக இருந்தது ஆகவே, நிதிக்கூற்றிற்கும் கணக்காய்வின் மூலம் செய்யப்பட்ட கணப்பீட்டிற்கும் இடையில் செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணத்தில் ரூபா 1.31 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசம் பரிசோதிக்கப்பட்டு அதன்படி சீராக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை பதிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் 2022 சனவரி 10 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், 2017 முதல் 2021 வரையாக காலத்திற்காக வருடாந்த கட்டணத்தில் ரூபா 1.78 மில்லியன் | இதிலுள்ள அட்டுறுவிறிகு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் சகல கொடுக்கல் |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான நீண்டகால நிலுவை வட்டி வருடாந்த கட்டணம் செலுத்தாமை காரணமாக திணைக்களத்தால் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது கணக்கீடு செய்யப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. | | வாங்கல்களை பதிவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (BOI) இற்கு செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணம் ரூபா 10.52 மில்லியனாக இருந்ததுடன் கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரையும் இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், பெறவேண்டிய நிலுவைகள் தொடர்பில் BOI இன் 2022 ஒக்தோபர் 05 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2018 முதல் 2022 வரையான காலத்திற்கான நீண்ட வட்டி நிலுவை அண்ணளவாக ரூபா 11.73 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது நிதி கூற்றுக்களில் இந்த நீண்ட நிலுவை வட்டியை அங்கீகரித்தோ அல்லது வெளிப்படுத்தியோ இருக்கவில்லை. | கம்பனி மின்வலு வழங்கலிற்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறவேண்டியிருந்த நிதிகள் கிடைக்காமையால் கஸ்ரப்பட்டுள்ளது. கம்பனி BOI கட்டணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு எவ்வித காசினையும் வைத்திருக்கவில்லை. தற்போது கம்பனியானது அந்த தண்டப்பண வட்டி கட்டணங்களை குறைப்பதற்கு BOI உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதுடன் சொல்லப்பட்ட வடடி முழுமையாக தீர்வு காணாமல் இன்னமும் கணக்கில் அட்டுறு வாக உள்ளது. | நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் சகல கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவு | வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பட்டியலுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வேறு ஏதாவது வேண்டப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி 2017/2018 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிக்கையை | 2017/2018 ஆண்டுற்கான நிலுவையுள்ளன ஏனென்றால் IRD ஆனது கணக்காய்வாளரால் சான்றுபடுத்திய நிதிக் கூற்றுக்களின் பிரதியை கோரியிருந்தது, ஆனால் கம்பனி நிதிக்கூற்றின் ஒரு பிரதியையே வைத்திருந்தது. இது உடனடியாக பூர்த்தி செய்யப்படும். | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை முதலீட்டு சபையுடனான உடன்படிக்கையின் பகுதி I இன் (14) (ஆ) ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்த திலிருந்து ஆறு மாதங்களிற்குள் தொழில் முயற்சிகள் நிதியாண்டின் போது இலவச வரி அடிப்படையில் முயற்சிகளால் இறக்குமதி செய்யப்பட்ட மூலதன பொருட்கள் மீது பௌதீக மெய்மையாய்வின் விளைவால் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்குகள் மற்றும் புள்ளிவிபரங்களின் கூற்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது உடன்படிக்கையின் வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை. | இந்த பிரிவு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்படி பின்பற்றப்படும். | BOI உடன்படிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3.5 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 38.9 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 35.4 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நிதிச் செலவினம் மற்றும் நிர்வாச் செலவினம் முறையே 99.9 சதவீதம் மற்றும் 84 சதவஷிதத்தால் அதிகரித்தமையே வீழ்ச்சியடைந்தமைக்கான பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

| **வருமானம் / செலவினம்** | **2022**<br>ரூபா | **2021**<br>ரூபா | **அதிகரிப்பு)/ (வீழ்ச்சி)**<br>ரூபா. | **சதவீதம்**<br>% |
|---|---|---|---|---|
| வருமானங்கள் | 109,203,318 | 116,107,930 | (6,904,612) | (5.94) |
| விற்பனைக் கிரயம் | 37,607,747 | 42,502,230 | (4,894,483) | (11.51) |
| நிர்வாகச் செலவினம் | 14,845,434 | 8,058,091 | 6,787,343 | 84.23 |
| நிதிச் செலவினம் | 53,242,294 | 26,622,950 | 26,619,344 | 99.98 |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்ர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைகள் மீதான வழிகாட்டலின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் துணைக் கம்பனிகளானது தாய் கம்பனிக்கு வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் சேர்த்து இறுதியாக்கப்பட்ட உபாய திட்டங்கள் சமர்ப்பிக்க வெண்டும். எவ்வாறாயினும்,<br>வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு என்பவற்றினை தயாரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் பூர்த்தியாக்கல் செயற்பாட்டில் உள்ளன<br><br>2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு அதே பாதீட்டின் பகுதியாக இருந்த தாய்கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட தெதுறு ஓயா மினி கைட்றோ (தனியார்) கம்பனியை கொண்ட ஸ்ரீ லங்கா எனர்ஜீஸிற்காக தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது | அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைகள் மீதான வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |